

## நெய்யாற்றின்கரை சஞ்சீவினி ஆஸ்பத்திரியில்

# இலவச மருத்துவ முகாம்

திருவனந்தபுரம், அக்.4–

திருவனந்தபுரம் மாவட்டம் நெய்யாற்றின்கரை உதயன் குளங்கரையை அடுத்த பூங்குழியில் உலக தரம் வாய்ந்த சஞ்சீவினி மருத்துவமனை மற்றும் மூலிகை புற்றுநோய் சிகிச்சை மையம் உள்ளது. இந்த மருத்துவமனையில் உலக இருதய தினத்தையொட்டி, தலைமை மருத்துவர் சி.ஜெகதீஸ்வரன் தலைமையில் இலவச இருதய நோய் மருத்துவ முகாம் நடைபெற்றது. இந்த மருத்துவமனையில் ஏராளமான நோயாளிகள் கலந்து கொண்டு இலவச மருத்துவ பரிசோதனை மற்றும் சிகிச்சைகளை பெற்றுக் கொண்டனர்.

இருதய மருத்துவ சிகிச்சை குறித்து மருத்துவமனையின் முதன்மை மருத்துவர் ஜெகதீஸ்வரன் கூறியதாவது:-

சஞ்சீவினி மருத்துவமனை மற்றும் மூலிகை புற்றுநோய் சிகச்சை மையம் கடந்த 7 தலை முறைகளாக மருத்துவ சேவை செய்து வருகிறது. பாரம்பரிய சிகிச்சை முறைப்படி நவீன மருத்துவ வசதிகளின் உதவியுடன் நோய் கண்டறிதல், அதன் படி சிகிச்சை அளித்து நோயற்ற வாழ்விற்கு வழிவகுத்தல் எமது முக்கிய நோக்கமாகும். தற்போது, இருதய நோய் சிகிச்சைக்காக, நவீன கண்டுபிடிப்புகளின் தொழில்நுட்பத்துடன் கூடிய சிகிச்சையினை பாலின பாகுபாடு இன்றி அனைத்து வயதினரும் பயன் அடையும் வகையில் அறுவை சிகிச்சை, வலி, பக்கவிளைவுகள் இன்றி தரமான சிகிச்சையளித்து இருதய நோயாளிகள் இயல்பு வாழ்க்கை வாழ வழி காட்டுகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.